# மனத்தாழ்மை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

①

## செய்தி: 63-07-14E உன்னை தாழ்த்து

31 உங்களுக்குத் தெரியுமா, ஜனங்கள் வல்லமையைப் பெற விரும்புகின்றனர், ஆனால் உண்மையில் வல்லமை என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரிவதில்லை. பாருங்கள், அதனுடன் எது சம்பந்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் அறிவதில்லை. மேலே செல்லும் வழி எப்பொழுதுமே கீழே உள்ளது. உங்களுக்கு வல்லமை வேண்டுமானால், தேவனுக்கு முன்பாக உங்களை எவ்வளவு தூரம் தாழ்த்த முடியும் என்பதை பாருங்கள். உலகப் பிரகாரமான உங்கள் சிந்தனை அனைத்தையும் அறவே அகற்றி, உங்களை தேவனுக்கு முன்பாக தாழ்த்துங்கள். அப்பொழுது, கட்டிடத்தின் எல்லாவிடங்களிலும் ஓடி மிகுந்த சத்தமிடும் மனிதனைக் காட்டிலும்

உங்களுக்கு அதிக வல்லமை இருக்கும். ஏனெனில் உங்களையே நீங்கள் அடக்கி ஆண்டு, கிறிஸ்துவுக்கு உங்களை அர்ப்பணித்து, அவருக்கு முன்பாக உங்களை தாழ்த்த உங்களால் முடிகிறது. அதுவே உண்மையான வல்லமை.

அகந்தையில்லாத, உண்மையில் தாழ்மையுள்ள, இனிமையுள்ள சபையை எனக்குக் காண்பியுங்கள். அப்பொழுது தேவனுடைய வல்லமையையும் ஆதரவையும் கொண்ட சபையை உங்களுக்குக் காண்பிப்பேன். அது உண்மை. அது தான் அதற்கு அவசியம், தாழ்மை. நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி, நமது மூலம் தேவன் கிரியை செய்ய அவரை அனுமதித்தல். நாம் மிகுந்த சத்தமிட வேண்டிய அவசியமில்லை.

32 என் தந்தை கூறினது போன்று, அவர் வண்டியை வயல் வழியாக

கொண்டு சென்ற போது, ஒவ்வொரு முறை அவர் மேடான பாகத்தின் மேல் மோதினபோது, வண்டி பயங்கரமாக குலுங்கினது. ஆனால் திரும்பி வரும் வழியில் அவர் அதே மேடான பாகத்தின் மேல் மோதின போது, வண்டி குலுங்கி சத்தமிடவில்லை. ஏனெனில் அது அநேக நன்மையான பொருட்களால் நிறைந்திருந்தது.

அது முற்றிலும் உண்மையென்று நான் கருதுகிறேன். பாருங்கள், தேவனுடைய நன்மையான காரியங்களால் நாம் நிறைந்திருக்கும் போது, ஆவியின் கனி நமது மூலம் வெளிப்படும். 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் பவுல், ''என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று குறிப்பிடுகிறான். பாருங்கள், அதை நாம் செய்ய வேண்டும்.

33 எல்லாவற்றிற்கும் மேலாக, நமதுஆத்துமாக்களுக்கு நாம் தனிப்பட்ட விதத்தில் தேவனுக்கு முன்பாக உத்திரவாதமுள்ளவர்களாய் இருக்கின்றோம். பாருங்கள்,

அது நீங்கள் பரலோகத்துக்கு செல்லுதல், நான் போகிறேன், அல்லது அவர் போகிறார் என்றல்ல. நீங்கள் போகின்றீர்கள், பாருங்கள், நீங்கள் முதலாவதாக. இதற்கு நீங்கள் கவனம் செலுத்தி, கர்த்தருக்கு முன்பாக இனிமையாக வரவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். தன்னைத் தாழ்த்துகிற எந்த மனிதனையும் தேவன் உயர்த்துகிறார் என்பது நான் கண்டறிந்த உண்மை. தனக்கு எல்லாம் தெரியும் என்று மார்பை உந்திக்கொண்டு நடக்கும் மனிதனிடம் நீங்கள் ஒன்றும் கூற முடியாது. அவன் அகந்தையுள்ளவன். அவன் எதையும் அடைவதில்லை. ஆனால்

தன்னைத் தாழ்த்தி இனிமையாய் நடக்கும் மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள்.

---

②

## செய்தி: 53-06-09A பிசாசியல் #2

115. எவ்வளவு போதகத்தை நீ கொண்டிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அதை நீ உனக்குள்ளாக அதை கிரகித்துக் கொள்ள முடியும். தேவன் பெரிய வார்த்தைகளில் இல்லை. ஒரு உத்தம இருதயத்தில் தான் தேவன் இருக்கின்றார். அது என்ன என்று எனக்கு தெரியாதிருக்கும் ஒன்றைப் போல், நீ இங்கே நின்றுகொண்டு, பெரிய வார்த்தைகளை பேசலாம், அது உன்னை தேவனுக்கு அருகாமையில் கொண்டுவராது. நீ நின்று கொண்டு உன்னுடைய பிரசங்கத்தை திரும்பக் கூறி இந்த காரியங்களைக் கூறத்தக்கதாக

எப்படிப்பட்ட பயிற்சியை மேற்கொண்டாலும் சரி, அது உன்னை தேவனண்டை கொண்டு போய்ச் சேர்க்காது. ஒரு அகராதியை வைத்து உறங்கும் அளவிற்கு நீ அகராதியை கற்றிருக்கலாம், ஆனால் அது இன்னுமாக உன்னை தேவனுக்கருகில் கொண்டு வராது. ஒரு தாழ்மையான, அற்பணிக்கப்பட்ட, எளிமையில் இருக்கின்ற இருதயமே உன்னை தேவனண்டையில் கொண்டு வரும். அது உண்மையே. ஆமென்! ஒரு தாழ்மையான இருதயத்தையே தேவன் நேசிக்கின்றார். இப்பொழுது, உங்களுக்கு அஆஇ (A B C ) தெரிய வில்லையென்றாலும் பரவாயில்லை, அது எந்த வித வித்தியாசத்தையுமே உண்டு பண்ணாது. ஒரு தாழ்மையுள்ள இருதயம் மாத்திரமே! ஒரு தாழ்மையான இருதயத்தில்தான் தேவன் வாசம் செய்கிறார்; கல்வியறிவில் அல்ல, பள்ளிகளில் அல்ல, வேத

சாஸ்திரத்தில், வேத கல்லூரிகளில் அல்ல, இந்த மற்ற எல்லாவிடங்களிலும் அல்ல, பெரிய வார்த்தைகளில் அல்ல, அல்லது முதல் தரமான இலக்கிய நயம் வாய்ந்த இடங்களில் அல்ல. மானிட இருதயத்தில் தேவன் வாசம் பண்ணுகிறார். ஆகவே உன்னைத் தானே நீ எவ்வளவாக தாழ்மையாக ஆக்கிக் கொள்கிறாயோ, இன்னும் அதிக எளிமையாக இருந்தால் நீ தேவனுடைய பார்வையில் மகத்தான ஒன்றாக ஆகலாம்.

116. ஒன்றை நான் உங்களுக்குக் கூறட்டும். இங்கே உங்களுடைய வயல்கள் முழுவதும் கோதுமையால் நிறைந்திருப்பதை நான் காண்கிறேன். கோதுமையினால் நிறைந்திருக்கும் கதிரானது எப்பொழுதுமே குனிந்து வணங்கினவாறே காணப்படும். அங்கே ஒரு சிறிய பழைய தண்டு முளைத்தெழும்பி தனக்கு எல்லாம் தெரிந்தாற்போல் இங்குமங்குமாக சுற்றி

அலைந்து கொண்டிருக்கும். அது தன் தலையில் ஒன்றும் பெற்றிருக்கவில்லை. அதைப் போலவே அவர்கள் தங்கள் தலைகளில் நிறைய காரியங்கள் வைத்திருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் இருதயங்களில் ஒன்றுமே இல்லை. அல்லது, ஒரு பரிசுத்த தலை வல்லமைக்கு தலை வணங்கும், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அடையாளங் - கண்டு கொண்டு அவருடைய கிரியைகளை விசுவாசிக்கும்.

---

③

## செய்தி: 60-12-07 *பெர்கமு சபையின் காலம்*

307. சமீபத்தில் ஒரு பெண்மணி ஒரு ஆங்கில புத்தகக் கடைக்குச் சென்று, “பரிசுத்த மார்ட்டின் வாழ்க்கை சரிதை”

என்ற புத்தகத்தை வாங்கச் சென்றாள். அவள் “பரிசுத்த மார்ட்டின்'' என்று சொன்னதும்.

308. புத்தகக்கடைக்காரர், புத்தக அலமாரியை இழுத்துப் பார்த்து விட்டு, ''அவர் வரலாற்றில் அவ்வளவாய் அறியப்பட்டவரல்ல, அவர் இறந்த பிறகு அவரைப் பரிசுத்தவான் என சபை ஆக்க வில்லையே'' என்றாராம். பாருங்கள்? இன்று வரையிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆனால் தேவனோ அவருடைய நாமத்தை அறிந்திருக்கிறார். மார்ட்டின் யார் என்று தேவன் அறிவார்.

309. பாருங்கள், அதுவே உள்ள வேறுபாடாகும். சிலர் தங்களுடைய நாமங்களை சில பெரிய ஸ்தாபனங்களில் பதிந்து கொண்டு விடவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் தேவனுடைய ஜனங்களோ அவ்விதமான காரியத்தை புறக்கணித்து விடுகிறார்கள். அவர்கள்

பெரிய ஆடம்பரமான காரியங்களை விரும்புகிறதில்லை. அவர்கள் பணிவாகவே இருக்க விரும்பு கிறார்கள். தாழ்மையையே விரும்புகிறார்கள். மேலே செல்லும் வழி கீழே உள்ளது. 'தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான். தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்'' அவர் தன்னைத் தான் தாழ்த்தினார். ஏதோ ஒரு பெரிய ஆளாக உங்களை காண்பித்துக்கொள்ள வேண்டாம். நீங்கள் எப்படியிருக் கிறீர்களோ அப்படியே இருங்கள். பாருங்கள்? தாழ்மையா யிருங்கள். தேவனுக்கு முன்பாக எளிமையாக இருங்கள். உங்கள் பார்வையிலும் நீங்கள் எளிமையாக இருங்கள். உங்களைப் பார்க்கிலும் மற்றவர்கள் உயர்ந்தவர்கள் என்று எண்ணிக் கொள்ளுங்கள். ''...உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் உங்கள் யாவருக்கும்

ஊழியக்காரனாயிருக்கக்கடவன்'' என்று கூறப்பட்டுள்ளது.

310. தன் அரையைக் கட்டிக்கொண்டு, சீஷர்களின் பாதங்களைக் கழுவின இயேசு கிறிஸ்துவைவிட உயர்ந்தவர் யார் இருக்க முடியும்? அவர் பாதங்களை கழுவிவிடுகிற ஒரு அடிமையைப் போல் ஆனார். பரலோகத்தின் தேவன், வானங்களையும் பூமியை யும் சிருஷ்டித்தவர், அங்கே கால்களில் படிந்த தூசியோடும், சாணத்தோடும் உள்ள பாதங்களோடும், அழுக்கான ஆடை களோடும் இருந்த அந்த மீன்பிடிக்கிறவர்களின் பாதங்களை (ஓ!) கழுவிவிடுகிற ஒரு அடிமை வேலைக்காரனைப்போல், கழுவி சுத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்.

அப்படியிருக்க நாமோ, நம்மை ஏதோ பெரிதாக நினைத்துக்கொள்ளுகிறோம். 'நாங்கள் டாக்டர் பட்டம் பெற வேண்டும், பிஹெச்.டி. பட்டம் பெறவேண்டும்'' என்று

எண்ணுகிறீர்கள். ஓ, என்னே ! அது கிறிஸ்துவுக்குரிய சிந்தையல்ல. அது அன்புள்ள இயேசு கிறிஸ்துவை காண்பிக் கிறதாக இல்லை. அவர் யாவர்க்கும் வேலைக்காரனாக ஆனார். அது உண்மை . அவர் நமக்குச் செய்தது போலவே நாமும் ஒருவருக் கொருவர் செய்யும்படி நமக்கு அவர் முன்னுதாரணமாக இருந்து நமக்குப் போதித்தார். ஓ அதுவே என்னுடைய கர்த்தர். அவர் பெரியவராக இருப்பதற்கு காரணம் அவர் சிறியவரானதால்தான். பாருங்கள், அதுவே அவரை அந்நிலைக்கு உயர்த்தியது.

311. என் வாழ்க்கையில் சில பெரிய மனிதர்களை நான் சந்திக்கும் சிலாக்கியம் கிடைத்தது. தாங்கள் பெரிய மனிதர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த சில மனிதர்களை சந்திக்கும் சிலாக்கியமும் எனக்குக் கிடைத்தது. ஒரு உண்மையான பெரிய மனிதன், நீங்கள் தான் பெரியவர் என்று உங்களை நினைக்க

வைக்கிறதற்கேதுவாக செய்து, தன்னை ஒன்றுமில்லாதவராகக் காட்டுகிறார். பாருங்கள்? இராஜாக்களையும், உண்மையிலேயே பெரிய மனிதராயிருக்கிறவர் களையும் சந்தித்திருக்கிறேன். உண்மையான, உறுதியான கிறிஸ்தவர்களை, நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் ஒட்டுப் போடப்பட்ட உடைகளை உடுத்தினவர்களாக இருந்தார்கள். இன்னும் சிலர் பிரசங்க பீடத்திற்கு வருகையில், எளிமையாக உடையுடுத்தியிருப்பார்கள். அப்படியிருக்க... பாருங்கள்? ஓ, என்னே ! நல்லது, இது வரையிலும்... சரி.

④

## செய்தி: 63-06-30M மூன்றாம் யாத்திரை

பிசாசு மிகவும் சாமார்த்தியமுள்ளவன். ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பு, முதலில் என்ன செய்யவேண்டுமென்று அவனுக்குத் தெரியும். அவனை மேற் கொள்ள வேண்டுமானால் நீங்கள் செய்யவேண்டிய ஒன்றே ஒன்று, கிறிஸ்துவின் மேல் சார்ந்து, உங்களைத் தாழ்த்தி, அவர் உங்களை வழிநடத்த அனுமதிப்பதேயாகும். வேறு எந்த வகையிலும் நீங்கள் அவனை மேற்கொள்ள முடியாது.

199. உங்கள் புத்தி சாதுரியம் அதைச் செய்யமுடியாது. நீங்கள் விசுவாசித்து, அவர் மேல் சார்ந்திருக்கவேண்டும். அவரே மேய்ப்பன். ஓநாய்களை விலக்குவது ஆடுகளின் வேலையல்ல. பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால்,

ஆடுகள் மேய்ப்பனுடன் கூடவே இருக்கவேண்டும். கிறுஸ்துவுக்குள் மாத்திரமே பாதுகாப் புண்டு, வார்த்தைதான் கிறிஸ்து, அதுவே பாதுகாப்பான ஸ்தலம்.

---

⑤

## செய்தி: 62-02-18 *விடாமுயற்சி*

194. இப்பொழுது. இந்த ஸ்திரீ, இந்த சீரோபேனிக்கியா தேசத்தாள், இவளும் விசுவாசித்தாள், இந்த கிரேக்க ஸ்திர, அவள், "ஆண்டவரே" என்றாள். முதலில் அவள். "தாவீதின் குமாரனே" என்றாள். ஒரு புறஜாதிக்கு தாவீதின் குமாரன் என்ற பெயரில் கிறிஸ்துவின் மேல் உரிமையில்லை. அது யூத வம்சத்தின் வழியாய் வந்த தாவீது ராஜா மூலம். அவர் எவ்வித கவனமும் செலுத்தவில்லை. ஆனால் அவள், "ஆண்டவரே, எனக்கு

இரங்கும்" என்று சொன்ன போது, ஆமென். அது அவரைக் கவர்ந்தது. அவர் அவளுக்கு ஆண்டவர், தாவீதின் குமாரன் அல்ல. அவர் அவளுக்கு ஆண்டவர். "ஆண்டவரே, எனக்கு இரங்கும்!" அது அவரைப் பிடித்தது. அவள் .... அவர் திரும்பிப் பார்த்தார். அவர் "மெய்தான், நாய்க்குட்டிகள் எஜமானின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னும் என்று நீ சொன்னது மெய்தான்" என்றார். என்னவென்று பாருங்கள், அந்த ஸ்திரீ தேவனுடைய வரத்தை சரியான முறையில் அணுகினாள். அவள் என்ன சொன்னாள்? அவள் சரியான முறையில் அணுகினாள் என்று அவர் கூறினார்.

195. அவர் அவளை அவமானப்படுத்தினார். அவர், "நீங்கள்..... நான் உங்களிடத்தில் அனுப்பப்படவில்லை. நீங்கள் உங்கள் சந்ததியில் நாய்கள். உங்களுடைய ஜாதி

நாய்களேயன்றி வேறல்ல. நான் உங்களிடத்தில் அனுப்பப்படவில்லை" என்றார்.

196. அவள், "மெய்தான், ஆண்டவரே" என்றாள். அதோ வார்த்தை உள்ளது. ஆமென். வார்த்தையில் நிலைத்திருங்கள். விசுவாசம் எப்பொழுதுமே வார்த்தையை அடையாளம் கண்டு கொள்ளும். ஆகிலும் நாய்கள் தங்கள் எஜமானின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே". அது அவரைக் கவர்ந்தது. "ஆண்டவரே, எனக்கு இரங்கும்".

197. அவர் திரும்பி அவளை நோக்கி, "நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம்; ஓ ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது. நீ சொன்ன அந்த வார்தையினிமித்தம், பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப் போயிற்று" என்றார். என்ன, அவளுக்கு என்ன கிடைத்தது? அவள் தேவனுடைய வரத்தை

சரியான முறையில் அணுகினாள். நீங்களும் சரியான விதத்தில் அணுக வேண்டும்... அதுவே தாவீதின் குமாரனால் முதன்முறையாக ஒரு புறஜாதிக்கு செய்யப்பட்ட அற்புதம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதுவே புறஜாதிக்கு செய்யப்பட்ட முதலாம் அற்புதம், சீரோபேனிக்கியா தேசத்தாளின் மகளைக் குணப்படுத்துதல், அது உண்மை . அவள் தேவனுடைய வரத்துக்கு சரியான அணுகுமுறையைப் பெற்றிருந்தாள். வார்த்தையின் மத்தியில் விசுவாசம் என்பது சரியான பயபக்தி, தாழ்மை, பாருங்கள்?

198. நீங்கள், "ஹு, அதை நான் விசுவாசிக்க மாட்டேன். எங்கள் சபை பிரமாணம் அதை கூறுவதில்லை, உ,ஊ, அதை நான் விசுவாசிக்க மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டு திரியக் கூடாது. உங்கள் சபை பிரமாணம் என்ன கூறினாலும், நீங்கள் சபை பிரமாணத்தை

அல்லது வேறெதாவதை தேவனுடைய வார்த்தைக்கு மேலாகவா உயர்த்தப் பார்க்கிறீர்கள்? தேவனுடைய வார்த்தையே சத்தியம். மற்றதெல்லாம் பொய். பாருங்கள்?

199. அவள் பயபகதியோடு, சமாதானத்தோடு, தாழ்மையோடு வந்தாள். நீங்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். மேலே போகும் வழி கீழேயள்ளது. எப்பொழுதுமே. "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான்" (மத். 23:12).

⑥

## செய்தி: 62-10-13 *வேறொருவரால்* விளையும் பாதிப்பு

76 ஆம், ஐயா! மோசே, ''உன் பாதரட்சையை கழற்றிப் போடு", என்னும் தேவனுடைய சத்தத்தைக் கேட்ட போது, அவருடைய சமூகத்தில் தன்னைத் தாழ்த்தினான். மோசே தரை மட்டும் குனிந்து தான் அணிந்திருந்த பாதரட்சைகளைக் கழற்றிப் போட்டான். பாருங்கள்? அது உண்மை.

பவுலை அந்த ஒளி தாக்கி தரையில் வீழ்த்தின்போது... அவர், ''சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? " என்றார்.

அவன், ''ஆண்டவரே, நீர் யார்? " என்றான். பாருங்கள், தரை மட்டும் விழுந்துவிட்டான். ''ஆண்டவரே, நீர் யார்?''

அவர், “நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே”, (அந்த அக்கினி ஸ்தம்பம்) - இயேசு நானே, “முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்'' என்றார்.

அவன், ''ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?'' என்றான். அவன் ஆயத்தமாகிவிட்டான்.

இயேசு வருவதை யோவான் ஸ்நானன் கண்டான். மிகப் பெரிய மனிதர்களில் ஒருவன். ''ஸ்திரீகளிடம் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் எவனுமில்லை“, என்று இயேசு கூறினார். அவர் வருவதை யோவான் கண்டபோது, அவன் மிகச் சிறியவன் என்றுணர்ந்து, ”அவருடைய பாதரட்சைகளை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரன் அல்ல“ என்றான். ஆமென்!

77 எப்பொழுதுமே கவனியுங்கள். பெரிய மனிதன் தன்னை தாழ்த்திக் கொள்வான். மேலே போகும் வழி

கீழேயுள்ளது. எப்பொழுதுமே. உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவன் உங்களை உயர்த்துவார். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். ''ஓ என்னே!, அது எனக்குப் பிரியம்.

உங்களை தாழ்த்திக் கொள்ளுங்கள். எப்பொழுதுமே சிறியவர்களாயிருங்கள். பெரியவர்களாயிராதிருங்கள். சிறியவர்களாயிருங்கள். பாருங்கள்? நமது மத்தியில் எப்படியும் தேவன் ஒருவர் மாத்திரமே பெரியவர். அது உண்மை.

நீங்கள், "இது பரிசுத்த சபை, பரிசுத்த ஜனம்" என்று அழைக்கிறீர்கள். ஓ, இல்லை! அது பரிசுத்த தேவனும் (அது உண்மை), பரிசுத்தமற்ற சபையும், பரிசுத்தமற்ற ஜனமுமே. அது உண்மை. பரிசுத்தசபை என்று ஒன்று கிடையாது, அது சபையில் பரிசுத்த தேவன். அது

பரிசுத்த ஜனம் அல்ல, ஜனங்களுக்குள் பரிசுத்த ஆவி. அப்படி சொல்லும்போது, நீங்கள் ஜனங்களைக் குறித்து பேசாமல், ஜனங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியைக் குறித்து பேசுகின்றீர்கள். ஆமென், ஆமென் அதுதான் சரியான சொல். ஆமென்! அது என் இருதயத்தில் தோன்றினது. அதை நான் உணர்ந்தேன். ஆம், ஐயா! அப்படி நான் கூறினதால் அவர் பிரியம் கொண்டார். அது எனக்குத் தெரியும். மகிமை! ஆம், ஐயா! சரி.

78 உங்களை சிறுமைப்படுத்திக் கொள்ளுங்கள். தூதன் பயபக்தியுடன் தன் முகத்தை இரு செட்டைகளால் மூடிக் கொண்டான். அவன் பாதங்களை மூடி தன்னை தாழ்த்தினான். மற்ற இரு செட்டைகளைக் கொண்டு அவன் பறந்தான். அந்த ஒரு செட்டைகளைக் கொண்டு தன்னை செயலில் ஈடுபடுத்திக் கொண் டான். அவன் தேவனுக்கு முன்பாக தாழ்மையாயிருந்தான். அது மாத்திரமல்ல,

அவன் சும்மா அங்கு உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை. அவன் செயலில் ஈடுபட்டான். சபையும் அதையே செய்ய வேண்டும். ஆமென்! அவன் செயலில் ஈடுபட்டான். அவனிடம் என்ன இருந்ததோ, அதை கொண்டு அவன் புறப்படத் தயாராக இருந்தான். ஆம், ஐயா! அவன் சொல்லக் கூடிய ஒன்றே ஒன்று, ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்பதே. ஆனால் அவன் அவ்வாறு கூறிக் கொண்டே செயல் ட்டான். அது உண்மை! அவன் செயல்பட்டான். இன்றிரவு சபைக்கு அது தான் தேவை. முதலாவதாக பயபக்தியாயிருங்கள், இரண்டாவதாக தாழ்மையுள்ளவர்களாயிருங்கள். அதன் பிறகு செயல்படுங்கள். ஆம் ஐயா!

7

## செய்தி: 63-08-25M நான் எப்படி ஜெயங்கொள்வது

பாருங்கள், நான் துவக்கத்தில் கூறினது போன்று, நீங்கள் தோல்வியடைந்தவர்களாகப் பிறந்தீர்கள். அந்த பிறப்பு உங்களை ஒரு போதும் ஜீவனுக்கு கொண்டுவர முடியாது. ஏனெனில் நீங்கள் தோல்வியடைந்தவர்களாகப் பிறந்தீர்கள். நீங்கள் தோல்வியடைந்த உலகில் தோல்வியடைந்த மக்களின் மத்தியில் தோல்வியடைந்த கோட்பாடுகளின் மத்தியில், தோல்வியடைந்த ஸ்தாபனங்களின் மத்தியில் இருக்கிறீர்கள். நீங்கள் எவ்வகையிலாவது வெற்றியடைய வேண்டும்.

62 அது ஒரு லீலிப்புஷ்பத்தைப் போன்றது. லீலிப்புஷ்பம் எல்லா

மலர்களைக் காட்டிலும் மிக அழகானது என்பது என் கருத்து. எனக்கு குளத்து லீலிப்புஷ்பம், இன்னும் மற்ற லீலிப் புஷ்பங்கள் என்றால் மிகப்பிரியம். குளத்தில் வளரும் தண்ணீர் லீலிப்புஷ்பத்தைப் போல் அழகானது எதுவுமில்லை. அது எவ்வளவு பிரகாசமாயுள்ளது. அது எதிலிருந்து தோன்றுகிறது? குளத்தின் அடியிலுள்ள சேற்றில் புதைந்துள்ள ஒரு சிறு விதையிலிருந்து அது தோன்றுகிறது. அது சேற்றில் உள்ள போது, அது மலராகும் போது உள்ள எல்லா பிரகாசத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதில் ஏதோ ஒன்றுள்ளது என்பதை அது அறிந்து அனுதினமும் பாடுபட வேண்டியதாயுள்ளது. அது கறுப்பாயுள்ளது; அது அழுக்கா யுள்ளது; அது சேறு நிறைந்தது. அது சகதியில் இருப்பதால் அதுவும் சகதியைப்போல் கொழ கொழ வென்றுள்ளது. இருப்பினும்

அச்சேற்றின் வழியாகவும், அழுக்கின் வழியாகவும். தண்ணீரின் வழியாகவும் தள்ளிக்கொண்டு மேலே வந்து, வெளிச்சத்தில் தன் தலையை வெளியே நீட்டி, அதற்குள் இத்தனை காலம் மறைந்திருந்த அனைத்தையும் வெளிப்படுத்துகிறது.

அது ஜெயங்கொள்ளுகிறவனுக்கு உதாரணமாயுள்ளது. அவன் ஒரு சமயம் பாவத்தில் மூழ்கியிருந்து தவறான செயல் களைப்புரிந்து வந்தான். அதை குறித்து இப்பொழுது கவலை கொள்ள வேண்டியதில்லை - ஒரு காலத்தில் தவறான செயல்களைப் புரிந்து வந்தான். பிறகு... இப்பொழுது ஏன் மறுபடியும் குளத்தை திரும்பிப் பார்க்கவேண்டும்? பாருங்கள், நீங்கள்....

63 தேவன் தமது முன்குறித்தலின்படி (பாருங்கள்?) இந்த விதையை ஜீவனுக்குக் கொண்டுவந்து, அது தன்னை வெளிப்

படுத்தும்படி செய்துவிட்டார், எல்லாவாற்றிற்கும் மேலாக அது ஜெயங்கொண்டுவிட்டது. பாருங்கள், அது சேற்றில் புதைந்து கிடந்திருந்தபோது தன்னை வெளிப்படுத்தவில்லை. அது தன்னை வெளிப்படுத்தவதற்கென மேலே எழும்பி வருகிறது. அவ்வாறே நீங்களும் பாவத்திலும், விபச்சாரத்திலும், ஆபாசமான வாழ்க்கையிலும் இருந்தபோது, நீங்கள் எதையுமே வெளிப்படுத்தவில்லை. ஆனால் அங்கு ஒரு வித்து இருந்தது. அது ஜீவனுக்குள் தன்னை தள்ளிக்கொள்ளத் தருணம் கிடைத்தது. இப்பொழுது நீங்கள் சூரிய வெளிச்சமாகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் துவக்கத்தில் உண்மையில் என்னவா யிருந்தீர்களோ, அது வெளிப்படுகிறது. நான் கூறுவதன் அர்த்தம் உங்களுக்குப் புரிகிறதா? நீங்கள் வெளிச்சத்தைக் கண்டீர்கள். நீங்கள் தேவனை

விசுவாசித்தீர்கள். உங்கள் இருதயத்தை திறந்தீர்கள். இப்பொழுது நீங்கள் லீலிப் புஷ்பமாயிருக்கிறீர்கள்.

64 சங்கை லீலிப்புஷ்பம் என்னும் என் பிரசங்கம் உங்களுக்கு ஞாபகமுள்ளதா? அது பாடுபட்டு உழைக்கிறது, ஆனால் அது நூற்கிறதில்லை. என்றாலும் சாலொமோன் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை .... அதை கவனித்துப் பாருங்கள். அது ஜீவனுக்கு எழும்புகிறது ... அது தனக்கென்று எதையும் வைத்துக்கொள்வதில்லை. அது எதைக் குறித்தும் கவலை கொள்வதில்லை. அது என்ன செய்கிறது? மற்றவர்கள் காணத்தக்கதாக தன் ஜீவனையும் அழகையும் வெளிப்படுத்து கிறது. மற்றவர்கள் மகிமையை காணும்படியாக - சேற்றினுள் புதைந்திருந்தபோது அதற்குள் என்ன இருந்தது என்பதை - அதன் ஜீவன் வெளிப்படுத்துகிறது. இப்பொழுது அது

மேலே உள்ளது. அதுதான் ஜெயங்கொள்ளுதல். அது சேற்றை ஜெயங்கொண்டது. அது உலகத்தின் காரியங்களின் மேல் ஜெயங்கொண்டது, இப்பொழுது தன்னை பரிபூரணமாக கொடுக்கிறது. எல்லோரும் அதை காணலாம் - அதன் வாழ்க்கையை நீங்கள் உங்கள் விரலை சுட்டிக்காட்ட முடியாது. பாருங்கள், அது உண்மையில் ஜெயங்கொண்டு விட்டது. அதற்கு விரோதமாக நீங்கள் ஒன்றையும் இப்பொழுது கூற முடியாது. அது சேற்றிலிருந்து தோன்றினது என்று மாத்திரம் ஏளனமாக கூறலாம். ஆனால் இப்பொழுது அது சேற்றில் இல்லை. அதற்கு மேலே வந்து விட்டது. ஆமென். அது முன்பு என்னவாயிருந்தது என்பதை சுட்டிக் காட்டக் கூடாது. இப்பொழுது அது என்னவாயுள்ளது என்பதைத்தான் காண வேண்டும். அது உயரத்துக்கு வந்து விட்டது.

வண்டு அங்கு வந்து, 'இது நறுமணம் கமழ்கின்றது, என் வேலையை நான் செய்யப்போகிறேன்'' என்கின்றது.

லீலிப்புஷ்பம் தன் இருதயத்தை திறந்து கொடுத்து, ''வா, நான் நன்றாயிருக்கிறேன்'' என்கின்றது. வண்டு அதிலிருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறது. பாருங்கள்? அது உண்மையான போதகர், அது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆனால் பாருங்கள், அது எங்கிருந்து வந்ததென்று. அப்படி செய்ய அது ஜெயங்கொள்ள வேண்டிய தாயிருந்தது.

65 ஒருகாலத்தில் அவன் அல்லது அவள் இளமையாகவும், சிவப்பாகவும், அழகாகவும் இருந்தனர். அவர்கள் அநேக சோதனைகளின் வழியாய் கடந்து செல்ல வேண்டிய தாயிருந்தது. ஆனால் அவையனைத்தையும் அவர்கள் ஜெயங்கொண்டனர். பாருங்கள். அவர்கள்

ஜெயங்கொண்டனர். இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவின் அழகை தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்துகின்றனர்.

கவனியுங்கள், சேற்றின் வழியாக வெளிப்படுத்துதல். அதை நாம் எப்படி செய்யவேண்டுமென்று இயேசு நமக்கு ஒரு உதாரணத்தை அளித்தார். ஜெயங்கொள்வது எப்படியென்று நாம் அறிய விரும்புகிறோம். அதை எப்படி செய்ய வேண்டுமென்று இயேசு நமக்கு கூறினார். பாருங்கள், தாழ்மை அவர் ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, சீஷர்களுடைய கால்களைக் கழுவி அவைகளைத் துடைத்தார். பரலோகத்தின் தேவன் தம்மை தாழ்த்தினார்.

மற்றவர்கள் நம்மைத் தாழ்த்துவதை நாம் விரும்புவதில்லை. ஆகையால் தான் பெண்கள் தலைமயிர் வளர்ப்பதையும், பெண்கள் உடை உடுத்தவது போல்

உடுத்துவதையும் விரும்புவதில்லை. அவ்வாறே ஆண்களும் பாருங்கள், அதுதான் காரணம்.... அப்படி செய்தால் மற்றவர்கள் அவர்களை அவமானமாக பேசுவார்கள். ஆனால் இயேசு எப்பொழுதும்... அவர் யாரென்பதைப் பாருங்கள். பெருந்தன்மை (Greatness) (நான் ஒன்றைக் கூறப்போகின்றேன்) பெருந்தன்மை தன்னைத்தான் தாழ்த்திக்கொள்ளும்.

66 புகழ் வாய்ந்த சிலரைச் சந்திக்கும் சிலாக்கியம் எனக்கு கிடைத்ததுண்டு. மாற்று உடையும் கூட இல்லாமல், ஜோபியில் ஐம்பது சென்டு வைத்திருப்பவன்தான், அவன் ஒன்றுமில்லாதவனாயிருக்கும்போதே தன்னை உயர்ந்தவன் என்று நினைத்துக்கொள்பவன். நான் உயர்ந்த மனிதர்களுடன் நின்றதுண்டு. அவர்கள் கிழிந்த சட்டைகள் அணிந்து, நீங்கள்

உயர்ந்தவர்கள் என்று நினைக்கும்படி செய்துவிடுகின்றனர். பாருங்கள், பெருந்தன்மை என்பது தாழ்மை. சபையே, அதை மறந்துவிடாதே! பெருந்தன்மை எப்பொழுதும் தாழ்மையில் வெளிப்படுகின்றது, நீங்கள் எவ்வளவு அழகாக உடுத்தியிருக்கிறீர்கள் என்பதில் அல்ல.... நீங்கள் அழுக்காக இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆவியின் தாழ்மையைக் குறித்து கூறுகிறேன். நீங்கள் சென்று உங்கள் உடைகளை துவைக்கவில்லை என்னும் அர்த்தத்தில் கூறவில்லை. நீங்கள் அதை செய்ய வேண்டும், அது உங்களுக்குத் தெரியும். பாருங்கள்? ஆனால் நான் தாழ்மையை - உண்மையான தாழ்மையைக் குறிப்பிடுகிறேன். தாழ்மையாயுள்ளதைப்போல் பாவனை செய்வதல்ல, உண்மையான தாழ்மையை .

⑧

## செய்தி: 65-10-31M மறுரூபப்படுத்தும் வல்லமை

247. அது போல் இந்த வேதசாஸ்திரிகளும் இந்த வேதத்தைப் படிக்கின்றனர். ஆனால் அதின்படி செய்ய அவர்கள் விரும்புவதில்லை. பாருங்கள்? அது சர்ப்பத்தின் வித்தைக் காண்பிக்கிறது. வார்த்தை ஜனங்களின் முன்னிலையில் எளிய முறையில் உறுதிபடுவதை அவர்கள் கண்டுள்ளனர். தேவனுடைய வார்த்தைக்கு மக்கள் தங்களை தாழ்த்துவது மிகவும் கடினம் என்பது போல் தோன்றுகிறது .

248. ஸ்திரீகளாகிய உங்களிடம் பெண்கள், "நீங்கள் ஏன் நீண்ட தலை மயிர் வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் ஏன் முழங்கா லுக்கு கீழ் ஆடை அணிகிறீர்கள்?'' என்று கேட்டு, அவர்களிடம் நீங்கள் அதன்

காரணத்தை எடுத்துரைக்கும் போது, அவர்கள் தோள்களைக் குலுக்குவதை நீங்கள் அனைவரும் கண்டிருக்கிறீர்கள் அல்லவா? அது சரிதானே? பாருங்கள், அவர்களுக்குள் ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய கண்ணியம் இருக்குமானால், அவர்கள் அது சரியென்று அறிந்து கொள்வார்கள். பாருங்கள்? அது சரியென்று அவர்கள் அறிவார்கள். ஆனால், பாருங்கள், அதற்கு தங்களைத் தாழ்த்த அவர்களால் முடியவில்லை. பாருங்கள், அது தான்.

249. காயீன் என்ன செய்தான் என்று பாருங்கள், உறுதிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தைக்குத் தன்னைத் தாழ்த்திக்கொள்ள அவனால் முடியவில்லை. அவனால். அப்படிச். செய்ய முடியவில்லை...

250. ஓ, பெந்தெகொஸ்தேகாரரும் கூட, "தேவனுக்கு மகிமை! அல்லேலூயா !

நான் என் தலைமயிரைக் கத்தரித்துக் கொள்கிறேன், அந்நிய பாஷைகள் பேசுகிறேன்'' என்கின்றனர். ஹா! அங்கே ஏதோ தவறுள்ளது என்று அது காண்பிக் கிறது, வித்து வித்தியாசமான ஒன்றை தோன்றச் செய்கிறது.

251. ஒரு விதையினால் முடியாது. தேவனுடைய வித்து தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ளும் ஒரு ஸ்திரீயை தோன்றச் செய்யாது. அது அப்படி செய்யாது. அதனால் அவ்விதம் செய்ய முடியாது. அவ்விதம் செய்யவே முடியாது. ஏனெனில் வேதம் அவ்விதம் கூறுகின்றது. பாருங்கள், அது அவ்விதம் செய்ய முடியாது. இல்லை, ஐயா.

தேவனுடைய வார்த்தைக்குத் தாழ்த்துவது மிகக் கடினமான செயல் போல் தென்படுகிறது .

252. அதை ஆதியாகமம் 4:6,7 ல் கவனியுங்கள். இங்கு எழுதி வைத்துள்ள

சில வேதவாக்கியங்களை நான் படிக்கிறேன். அவர், ''ஆபேல் செய்தபடியே நீயும் செய். உன் சகோதரன் செய்வதைக் கண்டாயா? நீயும் சென்று ஆபேல் செய்ததைப் போலவே செய். அவன் என்னை ஆராதித்தது போல் நீயும் ஆராதித்தால், உன்னை நான் ஆசிர்வதிப்பேன். இல்லையேல், பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்'' என்றார். பாவம் என்பது அவிசுவாசமே. 'நீ ஆபேலைப்போல் செய்யாவிடில்! அவனுடைய செயலை நான் உறுதிப்படுத்தி, அதை அவன் சரியாகச் செய்யும்படி நான் வெளிப்படுத்தினதையும் நீ கண்டிருக்கிறாய். நீயும் அவ்விதமே செய்யாவிடில், பாவம்-அவிசுவாசம்-உன் வாசற்படியில் படித்திருப்பதை அது காண்பிக்கிறது.'' பாருங்கள்?

253. இன்றைக்கும் தேவன் உறுதிப்படுத்துவதை அவர்கள் காண்கின்றனர். தேவன் என்ன செய்து

கொண்டிருக்கிறார் என்பதை அவர்கள் காண்கின்றனர். இவை யாவும் நிகழ்ந்து கொண்டிருப்பதை அவர்கள் காண்கின்றனர். அதைக் குறித்து அவர்கள் அறிந்துள்ளனர். தேவன் தம்முடைய அடையாளங்களை மேலே வானத்திலும், கீழே பூமியிலும் காண்பித்துக் கொண்டிருக்கிறார். என்ன நடக்கிறதென்று அவர்கள் காண்கின்றனர். ஆயினும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார் கள். பாருங்கள், சாத்தான், சர்ப்பத்தின் வித்து; புத்திசாலிகள், வேதாகமக் கல்லூரியில் நன்கு கல்வி பயின்று வெளியே வந்தவர்கள். அவர்கள் பிரசங்க பீடத்தில் எப்படி சரியாக நிற்கவேண் டும், ஒவ்வொரு வார்த்தையும் எப்படி இலக்கணத்தோடு பேச வேண்டும் என்றெல்லாம் அறிந்தவர்கள். பாருங்கள்? நிச்சயமாக. அப்படிப்பட்ட ஒருவர் தன்னைத் தாழ்த்திக் கொள்ள முடியாது. அவர்களால் அவ்விதம் செய்யவே

முடியாது. பாருங்கள், அவர்கள் செய்யமாட்டார்கள். அப்படி செய்வ தென்பது அவர்களால் முடியாத செயல் ஆகும்.

254. இல்லையென்றால், பாவம் வாசற்படியில் படுத்திருக்கிறது. அவிசுவாசம் வாசற்படியில் படுத்திருக்கிறது. அதன் பிறகு அவன் மனப்பூர்வமாக (wilfully) கீழ்ப்ப டியாதவனாகி விடுகிறான். "நீ நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது உனக்குப் பாவமாயிருக்கும்." (யாக்.4:17)- நன்மையானது என்னவென்று அறிந்திருந்தும், அதை நீ செய்யாமற்போனால், பாருங்கள்? வார்த்தை உறுதிப் படுத்தப்பட்ட பின்பும் அவன் அதை ஏற்றுக் கொள்ளாமல், மனப்பூர்வமாய் கீழ்ப்படியாதவனாகி, பிரிக்கும் எல்லைக் கோட்டை கடந்தான்.

அவன் கடந்தபோது ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்டான். நீங்கள் போகவேண்டிய அளவுக்கு ஒரு எல்லைக்கோடு உள்ளது. அதைக் கடந்து மறுபக்கம் சென்றால், நீங்கள் வெளியேறி விடுகின்றீர்கள். அது உங்களுக்குத் தெரியும், இல்லையா? ஒரு எல்லைக்கோடு உள்ளது. நீங்கள் நம்பாவிட்டால், எபிரேயர் 10:26ஐப் படியுங்கள். அந்த வேதவாக்கியத்தை தான் நான் அங்கு குறிப்பிட்டுக்கொண்டிருந்தேன், பாருங்கள்.

**சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினி மித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்**

எபி. 10:26

255. இது புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரு வசனம். அது சரியா? சத்தியமானது உங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டு, வாசிக்

கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, அதை நீங்கள் அறியும் அறிவை அடைந்த பிறகு மனப்பூர்வமாய் அவிசுவாசித்தால், அந்த பாவத்தினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராது. "

**நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையே இருக்கும்.**

எபி. 10:27

256. அது சரியா? பாருங்கள், நீங்கள் அந்த கோட்டைக் கடக்கலாம்-வனாந்தர வழியாக பிரயாணம் செய்த இஸ்ரவேல் புத்திரைப் போல. இஸ்ரவேலர் அதை தான் செய்தனர். அவர்கள் மோசேயின் செய்தியைக்கேட்டு அது உறுதிப்படுத்தப் பட்டதைக் கண்ட பிறகும், "ஓ, பாருங்கள் பிள்ளைகளே, நாம் அனை வரும் ஒருவரே. நாம் ஒருவருக்கொருவர் விவாகம் செய்து கொள்ள வேண்டும், நாம்

இதை செய்யவேண்டும்'' என்று கூறின கள்ளத் தீர்க்கதரிசிக்கு செவி கொடுத்தனர். மோசேயோ அவர்களுக்கு வேறு விதமாக போதித்திருந்தான், அதை தேவன் உறுதிப்படுத்துவதை அவர்கள் கண்டிருந்தனர். பாருங்கள், பிலேயாம் மோசேயைக் காட்டிலும் ஒரு நல்ல போதகனாக அவர்களுக்குத் தென்பட்டான். அவன் ஒரு சிறப்பான நாட்டைச் சேர்ந்தவன், அங்கு சிறந்த ஜனங்கள் இருந்தனர். அவர்கள் தங்களுக்கு ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டு ஒன்றாக இருந்தனர். அந்த மோவாப் தேசம் சிறந்த இராணுவத்தையும், மற்ற சிறந்த காரியங்களையும் பெற்றிருந்தது. அக்காலத்து மக்கள் அதைக் கண்டு பயந்திருப்பார்கள். இதோ ஒரு தீர்க்க தரிசி வருகிறான். அவன் கள்ள அபிஷேகம் பெற்றவன், பாருங்கள். அவன் அபிஷேகம் பெற்ற தீர்க்கதரிசியிடம் வரு

கிறான் (எவ்வளவு நெருங்கியுள்ளதென்று கவனியுங்கள்). அவன் ஜனங்களுக்குப் போதித்தான். அவர்களில் அநேகர் அதை பின்பற்றினர். இதை ஒரு போதும் மறந்து விடாதீர்கள். பாருங்கள், அவர்கள் வார்த்தையல்லாத ஒன்றை-உறுதிபடுத்தப்பட்டு, வார்த்தை என்று நிரூபிக்கப்படாத ஒன்றை-பின் தொடர்ந்தனர்.

257. நீங்களும் வேறு யாராகிலும் இங்கு வந்து வித்தியாசமானவைகளைப் போதிக்க அனுமதிக்க வேண்டாம். தேவன் உறுதிப்படுத்தி நிரூபித்துக் கொண்டு வருவதை மட்டும் கவனியுங்கள் .

258. அவர்கள் முன் நடந்த சம்பவங்களை நினைவுகூர்ந்து, ''தேவன் வானங்களில் தோன்றினார். மோசே வண்டுகளை, பேன்களை, தவளைகளை பேசி சிருஷ்டித்தான்; கொப்பளங்களையும், வியாதிகளையும்

வருவித்து, அதன் பின்பு அதை போக்கினான். அவன் சிவந்த சமுத்திரத்தைப் பிளந்தான், அதன் வழியாக நாங்கள் வந்தோம்.... வானத்திலிருந்து விழுந்த மன்னாவினால் எங்களைப் போஷித்தான். ஓ, அவன் தான் எங்கள் தீர்க்க தரிசி'' என்றனர்.

259. ஆனால் இங்கு வேறொரு தீர்க்கதரிசி வந்து, தேவனுக்கு மகிமை! நானும் ஒரு தீர்க்கதரிசி. உங்கள் அனைவருக் கும் ஒன்று சொல்லுகிறேன், புரிந்து கொள்ளுங்கள். நான் மோசேயை விட நன்றாக இலக்கணத்துடன் பேசுவேன். நான் இப்படிப்பட்டவன், அப்படிப்பட்டவன்'' என்றெல்லாம் கூறுகிறான்.

260. முதலாவதாக நடந்தது என்ன தெரியுமா? அவர்கள் அதில் மயங்கினர். அவர்கள் ஒவ்வொருவரும் வனாந்தரத்தில் அழிந்து போயினர். அவர்களில் ஒருவரும்

ஜீவிக்கவில்லை. அவர்களில் ஒருவரும் பரலோகத்தில் இருப்பதில்லையென்று இயேசு கூறினார்.

261. அவர்கள், ''எங்கள் பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்கள்'' என்றனர். பாருங்கள், பெந்தெகொஸ்தேயினரும் சரிதான், அவர்கள் உண்மையில் அனுபவங்கள் எல்லாம் கடந்து வந்தனர். ''எங்கள் பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்கள்.''

262. அவரோ, 'அவர்கள் ஒவ்வொருவரும் மரித்தார்கள்'' என்றார். மரணம் என்பது "நித்திய பிரிவினை''. அவர்கள் இந்த அனுபவங்களின் வழியே வந்திருந்தும், மறுபடியும் உயிரோடெழ மாட்டார்கள். மறைபொருளாகக் கூறுவோமானால், அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசினர், ஆவியில் நடனமாடினர், மற்றும் பல செய்தனர்.

⑨

## செய்தி: 62-10-13 *வேறொருவரால்*

## விளையும் பாதிப்பு

72 ஓ, சிந்தையுள்ளவர்களாயிருங்கள். ஒன்றைக் குறித்து மாத்திரம் நீங்கள் சிந்தையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அதுதான் உங்கள் சிறுமை. நீங்கள் தேவனை அடைய விரும்பினால், உங்களை மிகவும் சிறுமைப்படுத்திக் கொள்ளுங்கள். உசியா செய்தது போல் உங்களை பெரியவர்களாக்கிக் கொள்ளாதீர்கள். உசியா தேவாலயத்துக்கு சென்று, “நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். அதை கேட்க உங்களுக்கு உரிமையில்லை'' என்றான். பாருங்கள்? அவன் தன்னை தாழ்த்தி, கிறிஸ்துவின் ஊழியக்காரரே, என்னை மனித்துக் கொள்ளுங்கள்” என்று கூறியிருந்தால், அவனுக்கு குஷ்டரோகம் வந்திருக்காது.

அது உங்களுக்கு அளிக்கப்பட்ட பணியென்று அறிகிறேன். தேவன் அதற்கென்று உங்களை அழைத்திருக்கிறார். அது உங்கள் உத்தியோகம். நீங்கள் போய் செய்யுங்கள். ஐயன்மீர், "என் செயலுக்கு நான் வருந்துகிறேன்" என்று அவன் கூறி அங்கிருந்து வெளி நடந்திருந்தால், அவனைக் குறித்து வேறு விதமாக இந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும், ஆனால் அவனைத் திருத்த முயன்ற போது, அவன் கோபங்கொண்டான்.

நீங்கள் ஜனங்கள் செய்யும் தவறை அவர்களுக்கு உணர்த்தி காண்பித்தால், அவர்கள் சபையை விட்டு விலகுகின்றனர். நீங்கள் பெண்களிடம் குட்டை தலைமயிர் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னால், "அவர்கள் அப்படி செய்ய அனுமதிக்கும் வேறு இடத்துக்கு நாங்கள் செல்கிறோம்'' என்கின்றனர்.

⑩

## செய்தி: 60-12-07 *பெர்கமு சபையின்* காலம்

18. ஆகவே, நிச்சயமாகவே, நான் இங்கிருக்கிற இந்தக் கூடாரத்திலுள்ள மந்தையின் மேல் சகோதரன் நெவில் அவர்கள் மேய்ப்பராக இருப்பதற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறேன். அவர் மெதோடிஸ்டு பின்னணியிலிருந்து வந்தவர். தவறான இடத்தில் புசிக்க விரும்பின பொழுது, பரிசுத்த ஆவியினாலே அதைக் கண்டு பிடித்தார். இப்பொழுது இவ்வரங்களைப் பெற்று இயங்குகிறார். எவ்வளவு ஸ்பஷ்டமாக பாஷைகளை அவர் பேச பரிசுத்த ஆவியானவர் அவரை உபயோகப்படுத்துகிறார் என்பதை கவனியுங்கள். அப்பொழுது அவர் தன் சொந்த சிந்தையை

உபயோகிப்பதேயில்லை. அதேவிதமான லயத்தோடு வியாக்கியானம் பண்ணுதல், பிழையின்றி, சரியான ஏற்ற இறக்கத்தோடு வருவதை கவனியுங்கள்.

19. இந்த எளிய சகோதரர் ஜூனியர் ஜாக்சன் அவர்கள், ஜூனியர் ஜாக்சன் அவர்கள், ஜூனி உங்களை நான் புகழாமல் அமைதியாயிருப்பேன். ஜூனி ஜாக்சன் அவர்களுக்காக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அச்சகோதரர் நிச்சயமாகவே கர்த்தரிடத்திலிருந்து ஒரு பெரிய வரத்தைப் பெற்றிருக்கிறார்.

20. எப்பொழுதும் தாழ்மையாகவே இருங்கள். சபையில் ஒவ்வொருவருக்குமே செய்ய வேண்டிய பணி ஏதாவது இருக்கத் தான் செய்கிறது. ஆனால் அப்பணியை வேறு ஏதாவது ஒன்றிற்காக தள்ளி வைத்து விடாதீர்கள். உங்களுக்கு இருக்கும் ஊழியம் சபையின் ஏனையோருக்கிருக்கிற ஊழியத்தோடு சரியாக இணைந்து செல்லட்டும்.

தேவனுக்காகவே அனைத்து காரியங்களும். எல்லோருமே அந்நிய பாஷைகளில் பேசுகிறார்களா? எல்லோருமே வியாக்கியானம் செய்கிறார்களா?

21. ஏதாகிலும் நன்மையானதையே செய்ய முயலுங்கள். எப்பொழுதும் நல்லவர்களாகவே இருங்கள். பொறாமைப்படா திருங்கள், உட்பகை சொள்ளாதிருங்கள், எந்தவித கசப்புக்கும் இடங்கொடாதிருங்கள், ஒருவர் உங்களைக் குறித்து எவ்வளவு கெட்டதாக பேசினாலும் சரி, அவர் எவ்வளவு கெட்டவராயிருந் தாலும் சரி, அவருக்கெதிராக நீங்கள் ஒரு போதும் உங்கள் உள் ளத்தில் தீமையாக எண்ணாதீர்கள். ஏனெனில், அவ்வாறு நீங்கள் எண்ணினால் பிசாசு உள்ளே புகுந்து ஏதாவது வேலை செய்து விடுவான். தெய்வீக அன்பினாலும் அறிக்கையினாலும் அதை மூடிப்போங்கள். ஒப்புரவாகுதலை நாடி,

உங்களுக்கு தீங்கு செய்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். ''உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? ஆயக்காரர்களும் அப்படியே செய்கிறார்களே,'' என்று இயேசு கூறினார். பாவிகளும் மற்ற யாவருமே, தங்களிடம் நல்லபடியாக நடந்து கொள்கிறவர்களிடம் நல்லபடியாக நடந்து கொள்ள முடியும். உங்களுக்கு நன்மையே செய்யாதவர்களுக்கு நீங்கள் நன்மை செய்ய வேண்டும், உங்களுக்கு எந்த உதவியுமே செய்யாதவர்களுக்கு நீங்கள் ஏதாவது செய்யுங்கள். உங்களைப் பற்றி தீதாகப் பேசும் ஒரு மனிதனுக்கு, ஒரு நல்ல வார்த்தையையே அவரைப் பற்றி பேசுங்கள். அதின் மூலமாக உங்கள் இருதயத்திலிருந்து கசப்பையெல்லாம் அகற்றி விடுங்கள். அன்பிலே நிலைத்திருக்கிற வரையிலும், நீங்கள் எல்லோரிடத்திலும் அன்பு கூருவீர்கள்.

22. நீங்கள் சொல்லலாம், ''நல்லது, அவர்கள் அதைச் செய் தார்களே'' என்று. நாம் நியாயாதிபதி அல்ல. தேவனே நியாயாதிபதியாவார். நீங்கள் அந்த நபரை தள்ளிப் போட விரும்புவீர்களோ? நீங்கள் அப்படிச் செய்வீர்களா? அவர்கள் யாராயிருந்தாலும், நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பமாட்டீர்கள். நீங்கள் அவ்வாறு நடந்துகொள்ள விரும்பமாட்டீர்கள், எனவே அவர்களிடம் தயவு காட்டுங்கள். ''அன்பு திரளான பாவங்களை மூடும்'' ஆம், ஐயா. அன்பு, அந்த சிறந்த, கிறிஸ்தவ, தெய்வீக அன்பு.

23. ஒரு மனிதன் உங்களிடம் வந்து, உங்களை 'உருளும் பரிசுத்தர்'' என்றும், இன்னும் பல்வேறுவிதமான பெயர்களை உங்களுக்கு சூட்டி அழைத்தால், கோபமாக நடந்து கொள்ள வேண்டாம். அவ்வாறு உங்களால் செய்ய முடியாவிடில், அவ்விடத்தை விட்டு விலகிச் செல்லுங்கள். ஆனால் அந்த நபரிடம்,

''சகோதரனே, ஒருவேளை நான் இதைப் புரிந்த கொண்ட வண்ணமாக நீங்களும் புரிந்து கொண்டிருப்பீர்களானால், அப்பொழுது நான் உணருகிற வண்ணமாக நீங்களும் உணருவீர்கள்'' என்று அவரிடம் மிகவும் இனிமையாக பேசும் நிலைக்கு வர வேண்டும். பாருங்கள்? அந்த அளவுக்கு உங்கள் இருதயத்தின் தன்மை இருக்க வேண்டும். இவ்வாறு செய்து தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள். கிழக்கு மேற்கிலிருந்து எப்படி தூரமாயிருக்கிறதோ, அதுபோல் ஒருவேளை நாம் வேறுபட்டிருந்தாலும், அது எந்தவித வித்தியாசத்தையும் ஏற்படுத்திவிடுவதில்லை.

24. நான் அன்றிரவில் என் சகோதரன் மெல்வின் என்பவனைப் பற்றி கூறினேன், அதைப்போல் இது உள்ளது. அவன் நல்ல கட்டுமஸ்தான ஆள், உயரமானவன், மஞ்சள்நிற தலைமுடியை உடையவன். நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர்

உடன் பிறப்புக்கள் என்று கண்டு கொள்ளுகிறதற்கு ஏதுவாக அவன் தோற்றம் இருக்காது. நாங்கள் உருவத்தில் ஒத்திருக்க மாட்டோம். எங்களுக்குள் வேறுபட்ட நாட்டங்களும், விருப்பங்களும் உண்டு. இருந்த போதிலும், அவனுடைய தாயார் எனக்கும் தாயார் தான். அவனுடைய தந்தையார் எனக்கும் தந்தைதான், பாருங்கள்? ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள் தான் நாங்களிருவரும்.

25. நாங்கள் வித்தியாசமானவர்களாக இருக்கிறோம். மெல்வின் கிறிஸ்தவனல்ல. அவன் பேஸ்பால் விளையாடவும், குதிரை பந்தயத்தையும் விரும்புகிறவன். அவனுக்கு சாக்லேட் பை என்றால் ரொம்ப பிடிக்கும். நான் நிச்சயமாக அவனிலிருந்து வேறுபட்டவன். எனக்கு மீன்பிடித்தல், மற்றும் வேட்டை ஆடுதல் முதலியவை விருப்பமானவை. அவன் நான் விரும்புகிறவைகளையே திரும்பிக்கூட

பார்க்க மாட்டான். அவனுக்கு விருப்பமான வைகளில் நான் ஈடுபடமாட்டேன். நான் “செர்ரி பை' -ஐ விரும்புகிறேன். அவனோ "சாக்லேட் பை" - ஐ விரும்புகிறான்.

26. நான் ஜாடையாக இதைக் கூறுவதாக எண்ண வேண்டாம், எங்கோ ஓரிடத்தில், ஒரு கூட்டத்தில் நான், சாக்லேட் பை பிடிக்கும் என்று கூறிவிட்டேன். அடுத்த நாள் இரவில் சுமார் ஐந்து சாக்லெட் பை - வந்துவிட்டன, அல்லது செர்ரி பை நான்கைந்து வந்துவிட்டது. சகோதரிகள் அவைகளை தயார் செய்து, எனக்குக் கொண்டு வந்து விட்டனர். என்னே! அன்றிரவில் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம் தான். ஆனால் நான் அந்த விதமான அர்த்தத்தில் சொல்லவில்லை. பாருங்கள்?

27. எனவே, உங்களுக்கு வித்தியாசத்தைக் காண்பிக்கவே இதை

சொல்லுகிறேன். ஆனால் அவன் எப்படியிருந்தாலும், என்னுடைய சகோதரனாக இருக்கிறபடியினாலே, நான் அவனை நேசிக்கிறேன். அவன் கிறிஸ்தவனாக இல்லை, ஏனெனில் காரியங்களை வேறொரு வெளிச்சத்தில் பார்க்கிறான். நானோ கிறிஸ்துவின் ஒளியிலே காரியங்களைப் பார்க்கிறேன். இருந்தபோதிலும் கூட அவன் என்னுடைய சகோதரன் அல்ல என்று என்னால் கூற முடியாது. ஏனெனில் நாங்கள் ஒரே குடும்பத்தில் உடன் பிறந்த சகோதரர்கள்.

---

⑪

## செய்தி: 61-08-27 ***கிருபையின் செய்தி***

33 எனவே, இயேசு கிறிஸ்து தேவன் என்னும் விஷயத்தில் தேவனாகிய கர்த்தர் அங்கு வந்து அது உண்மையென்பதை உறுதிப்படுத்தினார். அது மாத்திரமல்ல,

அது உண்மையென்று அவர் வார்த்தையின் மூலமாகவும் உறுதிப்படுத்துகிறார்: அற்புதங்கள் அடையாளங்களின் மூலமாகவும் அது உண்மையென்று உறுதிப்படுத்துகிறார். அவ்வாறே கிருபை என்பதும் சத்தியம், அப்படியிருக்க ஏன் கிருபை தவறென்றும், "நாம் கிரியைகளினால் இரட்சிக்கப்பட்டோம்" என்றும் கூறி, அதை மற்றவர் குற்றப்படுத்த வேண்டும்? நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். நாம் இரட்சிக்கப்பட்டோம் என்பதை கிரியைகள் காண்பிக்கின்றன. ஆனால் உங்களை இரட்சிப்பது தேவனுடைய கிருபை மாத்திரமே. கிருபை மாத்திரமே உங்களை இரட்சிக்கிறது. கிருபை என்பது தேவன் உங்களுக்குச் செய்வதாகும். கிரியைகள் என்பது தேவன் உங்களுக்குச் செய்ததை எண்ணி அதற்கு பாராட்டுதலைத் தெரிவிக்க நீங்கள் தேவனுக்குச் செய்யும்

ஒன்றாகும். ஆனால் நீங்கள் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

34 “நான் சபையைச் சேர்ந்து கொண்டு, என் பெயரை புத்தகத்தில் பதிவு செய்து கொண்டேன். அவ்வளவு தான் நான் செய்ய வேண்டியது” என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர், “நான் கூச்சலிடுகிறேன், அவ்வளவு தான் நான் செய்ய வேண்டியது” என்று எண்ணுகின்றனர். இன்னும் சிலர், “நான் அந்நிய பாஷை பேசுகின்றேன், அவ்வளவுதான் நான் செய்ய வேண்டியது” என்று நினைக்கின்றனர். மற்றும சிலர், “வியாதியஸ்தர்களை சுகப்படுத்த எனக்கு வல்லமை உள்ளது. அவ்வளவுதான் நான் செய்ய வேண்டியது” என்று எண்ணுகின்றனர். அதுவல்ல தேவனுடைய கிருபையே உங்களை இரட்சிக்கிறது. தேவனுடைய திகைப்பூட்டும் கிருபை. நான் எந்த தகுதிகளையும் நம்பமுடியாது. சிலர், “அங்கு ஒரு பெரிய மனிதன்

இருக்கிறார். அவர் இதை செய்வதை, அதை செய்வதை நான் கண்டிருக்கிறேன்" என்கின்றனர்

ஆனால் பவுல், "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் சகல இரகசியங்களையும் அறிந்தாலும், வரத்தை உடையவனாயிருந்தாலும், எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், சகல அறிவையும் அறிந்திருந்தாலும், அன்பு - அதாவது கிருபை - எனக்குள் வரும் வரைக்கும் நான் ஒன்றுமில்லை" என்று 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் கூறியுள்ளான். தேவன் அதை செய்ய வேண்டும். இவையனைத்தும் நீங்கள் செய்தும், இழந்து போனவர்களாக இருக்கலாம். உங்களை இரட்சிப்பது

கிருபையே மானிடவர்க்கத்துக்கு தேவனுடைய கிருபை.

35 அவரை சிந்தித்துப் பார்க்கும்போது...

வெள்ளியன்று விடியற்காலையில் அந்த திறந்த வெளியில் அது தோன்றின பிறகு, நான் உடனே அந்த கிருபையை சிந்தித்துப் பார்த்தேன், நான் பின்பு ஒரு மரக்கட்டையின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. நான், "ஓ, தேவனே என்னை இரட்சிக்க உமது கிருபை இவ்வளவாகத் தன்னை தாழ்த்தினது. ஒரு எளிய, படிப்பறிவில்லாத ஈனனின் மீது நீர் ஏன் அனுதாபங்கொள்ள வேண்டும் எங்கள் தாழ்மையுள்ள சிறு கூடாரத்துக்கு நீர் எப்படி வர நினைத்தீர் அங்கு சமாதானம் நிலவுகின்றது. அங்கு எளிய ஜனங்கள், இவ்வுலகின் ஐசுவரியம் எதையும் பெற்றிராமல் வாழ்க்கையில்

தாழ்ந்து காணப்படுகின்றவர்கள் வருகின்றனர், இருப்பினும் பரிசுத்த ஆவியினாலே உமது கிருபை எங்கள் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. நீர் எங்கள் வியாதியை சுகப்படுத்துகிறீர் எங்கள் பாவங்களிலிருந்து எங்களை இரட்சித்து எங்களை உமது ஜனங்களாக்கிக் கொண்டீர். எங்களுடன் ஈடுபடும்” என்று கூறினேன்.

36 அப்பொழுது தாவீதைக் குறித்து நான் சிந்தித்தேன். கர்த்தருக்கென்று ஒருவீட்டைக் கட்டவேண்டும் என்னும் எண்ணம் அவன் மனதில் தோன்றினது. அவன், “கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம் பண்ணும் போது, தேவனுடைய பெட்டி ஆட்டுத் தோல்களில் செய்யப்பட்ட கூடாரத்தில் வாசமாயிருப்பது நல்லதல்ல” என்றான்.

அப்பொழுது கர்த்தர் தீர்க்கதரிசியிடம், “நீ போய் என் தாசனாகிய தாவீதை

நோக்கி, "ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டு மந்தையை விட்டு எடுத்து, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன், என்று சொல்" என்றார்.

37 அவர் எப்படி அதை செய்ய முடிந்ததென்று, நான் தேவனுடைய கிருபையைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கலானேன் - முடிவுபரியந்தம் இரட்சிப்பவர்! என்னைப் போன்ற ஓர் ஏழை ஈனனை அவர் தெரிந்துகொண்டு, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க எனக்குத் தருணம் அளித்து, மற்றவர்கள் இரட்சிக்கப்படுவதையும், சுகம் பெறுவதையும், பிரிந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேருவதையும் பாழான வாழ்க்கை மீண்டும் சரியான நிலயில் வருவதையும் காண எனக்குக் கிருபை அளித்தார். ஓ, அது திகைப்பூட்டும் கிருபை! இழிவான, தாழ்ந்த, காட்டில் அணில் வேட்டையாடும்

வேட்டைக்காரனிடம், அவர் வானவில் வடிவில் வந்து - அது "உடன்படிக்கைக்கு" அடையாளமாயுள்ளது - நான் பிரசங்கிக்க ஒரு செய்தியையளித்து, அவர் அதற்கு பின்னால் இருந்துகொண்டு அதை உறுதிபடுத்துகிறார் என்பதற்கு அடையாளமாக ஒரு உடன்படிக்கையின் உருவில் காட்சியளித்தார். அவர் எப்பொழுதுமே அதன் பின்னால் இருந்து கொண்டு தாங்குவார். ஏனெனில் செய்தியானது இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய மகிமையைக் குறித்துமே.

38 அவர் என்னை உலகம் முழுவதும் வெவ்வேறு நாடுகளுக்கு போகும்படி செய்தார். இலட்சக்கணக்கான மக்கள் கர்த்தரிடம் வந்து அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருடைய நன்மையினால் நிறைக்கப்பட்டு, அவருடைய வல்லமையினால் பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய

மகத்தான சர்வ வல்லமையினால் அவர்கள் சுகம் பெறுவதை நான் காணும்படி செய்தார் நானும் தீர்க்கதரிசியுடன் கூட சேர்ந்து, "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலே" என்று சத்தமிட முடியும். படிப்பினால் அல்ல, வேத சாஸ்திரத்தினால் அல்ல, ஆனால் தேவனுடைய ஆவியினால் அவர் ஜங்களை இரட்சிக்கிறார், தேவனுடைய ஆவியினால் அவர் ஜனங்களை சுகமாக்குகிறார். தேவனுடைய ஆவியே ஜனங்களுக்கு செய்தியையளிக்கிறது. தேவனுடைய ஆவியே வார்த்தையை உறுதிப்படுத்துகின்றது

39 இன்று நமக்கு வேதபண்டிதர்கள் உள்ளனர் இன்று நமக்கு வேதசாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் உள்ளனர். புத்தியுள்ள, கல்வி கற்ற மேதைகள் உலகம் முழுவதும் நமக்குள்ளனர். ஆனால் அவருடைய வார்த்தையை பேசச் செய்து

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதைக் காண்பிக்க தேவன் பேரிலுள்ள எளிய விசுவாசம் தான் அவசியம். இயேசு கிறிஸ்துவை நிகழ்காலத்தில், கொண்டு வர, ஒரு எளிய, தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட இருதயமே அவசியமாயுள்ளது. அதற்கு வேத சாஸ்திரம் அவசியமாயிருக்குமானால், பிரிஸ்பிடேரியன், மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, கத்தோலிக்கர் போன்றவர்கள்; படிக்காத, எளிய ஜனங்களாகிய நமக்கு தருணம் இருந்திருக்காது. ஆனால் இதற்கு மனித அறிவு அவசியமில்லை. பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே மாத்திரம் நான் இரகசியங்களை வெளிப்படுத்துவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன், " கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக" என்று

ஆர்ப்பரிப்பான். அதுதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. தேவனுடைய திகைப்பூட்டும் கிருபை தமது மக்களின் மேல் தங்கியுள்ளது.

அவர் படிக்காதவர்களையும், எழுத்தறிவில்லாதவர்களையும் தெரிந்து கொண்டு. இயேசு கிறிஸ்து மாறாதவர் என்பதைக் காண்பிக்கிறார்


40 இயேசு இவ்வுலகில் வந்தபோது, அவர் சிறந்த வேத பண்டிதர்களிடம் செல்லவில்லை, அவர் பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடமும் செல்லவில்லை, அவன் அவர் பேரில் குற்றஞ் சாட்டினான்.

ஆனால் அவர் மீன் பிடிப்பவர்களையும் ஏழை ஜனங்களையும் தெரிந்து கொண்டு, எளிய வாழ்க்கையை கடைபிடித்தார். அவர்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்தி, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரை

பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார், அவருடைய கிருபை யூதர்களிலிருந்து புறஜாதிகளுக்கு இப்பொழுதும் சென்று, நாம் இப்பொழுது பார்த்த விதமாக, இந்த கடைசி நாட்களில் அவருடைய நாமத்துக்கென்று ஒரு கூட்டம் ஜனங்களை அழைத்துக் கொண்டிருக்கிறது. திகைப்பூட்டும் கிருபை, எவ்வளவு இனிமையான தொனி.

---

# வார்த்தையை வாசிக்க நிறைய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்


# நீங்கள் ஏராளமாக கேட்க வேண்டுமென்பது தான் அவருக்கு பிரியம். பெரிய காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்

சகோ. பிரன்ஹாம்

**சிறிய காரியங்களைப் போலவே பெரிய காரியங்களையும் பெற்றுக்கொள்வது அவ்வளவு எளிதே. நீங்கள் வெறுமனே விசுவாசிக்க வேண்டும். அவ்வளவு தான்.**

சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

இன்று நமக்குத் தேவை என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல, பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள் தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்